# முதல்வரை அமெரிக்க வாழ் தமிழர்கள் அன்புத் தவழ வழியனுப்பிய காட்சி!



அமெரிக்காவில் கழகக் கொடியை பறக்கச் செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வழியனுப்பி வைத்த அமெரிக்க வாழ் தமிழர்கள்.



அமெரிக்கத் தமிழர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாசம் பொங்க சிகாகோ விமான நிலையத்தில் வழி அனுப்பி வைத்த உணர்ச்சி மிக்க காட்சி.






தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உலகின் முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்து, வெற்றிகரமாக தனது பயணத்தை முடித்துக் கொண்டு சென்னைக்கு புறப்பட்டபோது, முதலமைச்சர் அவர்களை சிகாகோ விமான நிலையத்தில் நேற்று (12.9.2024) அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாகமாக வழியனுப்பி வைத்தார்கள்.

### ரூ.100 கோடியில் – ஓசூரில்

## மேம்படுத்தப்பட்ட மின்னணு, டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனம்!

### சிகாகோவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்!

சென்னை, செப்.14-

RGBSI நிறுவனத்துடன் 100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் கள் முன்னிலையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்டது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 12.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், RGBSI நிறு வனத்துடன் 100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் மேம் பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற் கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

உற்பத்தி மற்றும் உட்கட் டமைப்பு வளர்ச்சி யில் அதிகமான தனியார் மற்றும் பொதுத்துறை முதலீட்டை ஈர்த்து, தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச் சியை தமிழ்நாடு அரசு ஏற் படுத்தி வருகிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்ற கோட்பாட்டை கடைப் பிடித்து வருவதன் காரணமாக உயர்கல்வியில் மொத்த சேர்க்கையில் நாட் டிலேயே அதிகபட்ச விகிதத்தை அடைந்தும், பன்முகத்திறன் கொண்ட சிறப்பான மனிதவளத்தை உருவாக்கியும், நாட்டின் மிகப்பெரிய உற்பத்தி தளமாகவும், அறிவுசார் பொருளாதாரமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது.

முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இலட்சக் கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடவும், மாநில பொருளாதாரத்தை மேலும் வலுவடையச் செய்திடவும், 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்து, அதனை அடைய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைவதற்கு உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பெருமளவு முதலீடுகளை ஈர்த்திட வேண்டும். அதேபோல அதிக அளவில் வேலைவாய்ப்பினை வழங்கக் கூடிய தொழில்நுட்பம் மற்றும் மூலதன தீவிர துறைகளிலும் சமச்சீரான முதலீடுகளை ஈர்ப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில் உலகின் 17 முன்னணி நிறு வனங்களுடன் 7516 கோடி ரூபாய் முத லீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ேற்கொள்ளப்பட்டதோடு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக 12.9.2024 அன்று சிகாகோவில், RGBSI நிறுவனத்துடன் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது.

அதன் விவரம் வருமாறு:

Rapid Global Business Solutions, Inc. (RGBSI) நிறுவனம் RGBSI நிறுவனம், பல்வேறு தொழில் நிறு வனங்களுக்கு பணியாளர் மேலாண்மை, பொறியியல், தரமான வாழ்க்கைச் சுழற்சி மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப தீர்வுகளையும், பல துறைகளுக்கான மேம்பட்ட மின்னணு மற்றும் தொழில்நுட்ப தீர்வுகளையும் வழங்கும் நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின், மிச்சிகனில் உள்ள ட்ராயில் அமைந்துள்ளது.

#### புரிந்துணர்வு ஒப்பந்தம்

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் RGBSI நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், RGBSI நிறு வனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாக்டர் நானுவா சிங், தலைவர் மற்றும் முதன்மை அலுவலர் ரவிக்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ஜி.எஸ்.டி. குறித்து கேள்வி எழுப்பிடும்

## சிறு வணிகர்களை அவமதிப்பதா?

### நிர்மலா சீதாராமனுக்கு - ராகுல் காந்தி கடும் கண்டனம்!

புதுடெல்லி, செப்.14-

ஜி.எஸ்.டி குறித்து சிறு வணிக உரிமையாளர்கள் கேள்வி எழுப்பினால் அவமதிக்கப்படுவதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி குற்றம்சாட்டி உள்ளார்.

கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கோவை ஓட்டல் உரிமையாளர் சீனிவாசன், ஜி.எஸ்.டி குறித்து ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் கேள்வி எழுப்பினார். இந்நிலையில் கோவை உணவக உரிமையாளர் சீனிவாசனை ஒன்றிய நிதியமைச்சர் அவமதிப்பு செய்ததாக வீடியோ ஒன்று சமூகவலைதளங்களில் வெளியானது. இதற்கு மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், சிறு வணிக உரிமையாளர்களிடம் ஒன்றிய அரசும், ஒன்றிய அமைச்சர்களும் ஆணவத்தோடு நடந்துகொள்வதாக குற்றஞ்சாட்டினார்.

ஜி.எஸ்.டி குறித்து கேள்வி எழுப்பியவர்கள், சிறு வணிக உரிமையாளர்களாக இல்லாமல், பெரு முதலாளிகளாக இருந்தால் அவர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரிப்பார்கள் என அவர் சாடி உள்ளார்.

சிறு வணிகர்களை அவமதிக்கும் மோடி அரசு, கோடீஸ்வர நண்பர்களுக்காக விதிகளை மாற்றி, சட்டங்களை திருத்தி சிவப்புக் கம்பளம் விரிப்பதாக ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி. போன்றவற்றால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்கள் கேள்வி எழுப்பினால், அவர்களை மோடி அரசு ஆணவத்தோடு அவமதிப்பதாக ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

### மதுபானக் கொள்கை வழக்கில்

## டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன்!

### உச்சநீதிமன்றம் உத்தரவு! சி.பி.ஐ. அமைப்புக்கு கடும் கண்டனம்!

புதுடெல்லி, செப்.14-

மதுபானக் கொள்கை வழக்கில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமின் வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கில் சிபிஐ அமைப்புக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனமும் தெரிவித்தது.

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மதுபானக் கொள்கை வழக்கில் அமலாக்கத் துறையால் கடந்த மார்ச் 21ம் தேதி கைது செய்யப்பட்டார். அமலாக்கத் துறையின் காவலில் இருக்கும் போதே, ஜூன் 26ம் தேதி சிபிஐயும் அவர் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்தது. அமலாக்கத்துறை வழக்கில் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் ஜாமின் வழங்கினாலும், சிபிஐயால் கைது செய்யப்பட்டிருந்ததால் சிறையிலேயே இருந்தார். இதைத்தொடர்ந்து, சிபிஐ கைதுக்கு எதிராக கெஜ்ரிவால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ஜாமின் கோரியும் மனு தாக்கல் செய்திருந்தார். இது தொடர்பான விசாரணை ஏற்கெனவே முடிந்த நிலையில், அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமின் வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. 22 மாதங்களாக கெஜ்ரிவாலை சிபிஐ கைது செய்யவில்லை, அமலாக்கத்துறை வழக்கில் ஜாமின் வழங்கப்பட்ட பின்னர் உடனடியாக கைது செய்யப்பட்ட தன் அவசியம் என்ன? என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

“ஜாமின் என்பது விதி, சிறை என்பது விதிவிலக்கு என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்” எனவும், சிபிஐ அமைப்பு, கூண்டில் அடைக்கப்பட்ட கிளி என்ற கருத்தை மாற்ற வேண்டும், கூண்டிலிருந்து சி.பி.ஐ. வெளிவர வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

வழக்கில் ஒத்துழைக்கவில்லை என்பதை காரணம் காட்டி, ஒருவரை கைது செய்வதை ஏற்க முடியாது என்றும் சிபிஐ அமைப்புக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜாமின் கிடைத்ததை தொடர்ந்து, டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், 6 மாதங்களுக்கு பின்னர் அவர் சிறையில் இருந்து வெளியில் வருகிறார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## பேரறிஞர் அண்ணா 116வது பிறந்தநாளை முன்னிட்டு - திருவுருவச் சிலைக்கு மரியாதை!

### மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!

கன்னியாகுமரி, செப்.14-

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு போதித்து, அவ்வழியில் செயலாற்ற அறிவுறுத்திய காஞ்சி தந்த காவியத் தலைவர், உலகத் தமிழர்களின் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் மற்றும் கழகத்தினரால் அண்ணா என்று பெருமையுடன் அழைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 15.09.2024, ஞாயிறு அன்று காலை 9.00 மணியளவில் எனது தலைமையில் வடசேரியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.



ஆகவே கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.



காரைக்குடி மாநகரக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் சிவகங்கை மாவட்டச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி வணங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், காரைக்குடி மாநகராட்சி மேயர் சே. முத்துத்துரை, துணை மேயர் நா. குணசேகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் ஆகியோர் உடன் உள்ளார்கள்.